**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

<table>
<tr><td colspan="4">2023-ம் ஆண்டு ஜீன் மாதம் 6-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>ஜெயராஜன்</td><td>தொழில் :</td><td></td></tr>
<tr><td>க.பெ/தபெ.:</td><td>ரெகுராமன்</td><td>சமயம் :</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி :</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**6.6.2023 OS No. 26 /2022 வா.சா.1** ஜெயராஜன் **ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் 2லக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் 2லக்க சொத்து சம்மந்தமாக மட்டும்தான் 3ம் பிரதிவாதி எதிர்வழக்கு செய்து வருகிறார் என்றால் சரிதான். 2லக்க சொத்து அரசு ஆவணங்களில் அருள்மிகு. பிள்ளையார்கோவில் என்றுதான் உள்ளது என்றால் இல்லை. மொத்தம் சர்வே எண்.144/2ல் மொத்தம் 1 ஏக்கர் 92 சென்ட் ஆகும். அதில் 4 சென்ட்டில் மட்டும்தான் விநாயகர் சிலை உள்ளது. மற்ற இடங்கள் அரசு புறம்போக்கு என்று உள்ளது.

2. தாவா 2ம் லக்க சொத்து முழுவதுமே அரசு புறம்போக்கு நிலம் என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால் நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம். FMB வரைபடத்தில் முழுவதுமாக ஒரே சேகரமாகதான் காட்டப்பட்டுள்ளது என்றால் 4 சென்ட் தனியாக காட்டப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ஆவணமான வரைபடத்தில் விநாயகர் கோவில் என்றுதான் உள்ளது என்றால் பேனாவால் எழுதப்பட்டு விநாயகர் கோவில் என்று உள்ளது. அனைத்து குறிப்புகளும் பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறுதான் கிராம நிர்வாக அதிகாரி எனக்கு கொடுத்தார்.

3. தாவா 2லக்க சொத்தை நான் அனுபவித்து வருவதை காட்ட பி மெமோ தாக்கல் செய்யவில்லை என்றால் பல ஆண்டுகாலமாக பி மெமோ கொடுப்பதையே அரசு நிறுத்திவைத்துள்ளது. எனது தரப்பு வா.சா.ஆ.2 ஆவணத்தில் புல எண்.144/2ஆனது அரசு புறம்போக்கு என்றும், அதன் விஸ்தீரணம் 0.77.5 ஹெக்டேர் என்றும் அதில் காலம் 12ல் அருள்மிகு பிள்ளையார் கோவில் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 4 சென்டில்தான் பிள்ளையார் கோவில் உள்ளது. மொத்த புல எண்.144/2ல் 0.77.5 ஹெக்டேரும் பிள்ளையார் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை.

4. தாவா 2லக்க சொத்தை தாவா 1லக்க சொத்துடன் சேர்த்து ஒரே சேகரமாக அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. இரண்டும் வெவ்வேறு புல எண் என்றால் இரண்டும் அருகருகே உள்ளது. தாவா 2ம் லக்க சொத்தை நான் ஆக்கிரமித்து வைத்திருப்பதாக சொல்லி 3ம் பிரதிவாதி பஞ்சாயத்து தலைவர் அரசுக்கு

கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் திருப்புவனம் வட்டாட்சியர், திருப்புவனம் ஆய்வாளர் ஆகியோர்கள் வந்து ஆக்கிரமிப்பை அகற்றினார்கள் என்றால் கணக்கு காட்டுவதற்காக நாங்கள் இல்லாத சமயம் தாவா 2 வது லக்க சொத்திலிருந்த எங்களது பருத்தி வயல், கொய்யா, தென்னை மரங்களை அரசு அதிகாரிகள் வரும் முன்பே ஊராட்சிமன்றத்தலைவர் மற்றும் 3 நபர்கள் சேர்ந்து அழித்துவிட்டார்கள்.

5. ஊராட்சிமன்றத்தலைவர் மற்றும் 3 பேரும் சேர்ந்து தாவா 2ம் லக்க சொத்தில் நான் வைத்திருந்த மரங்களை மற்றும் பருத்தி செடியை அப்புறப்படுத்திவிட்டதாக மேற்படியாருக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு என் தரப்பில் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு மேற்படி நபர்கள் அனுப்பிய பதில் அறிவிப்பை என் தரப்பில் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 அறிவிப்பில் நான் சொல்லியுள்ளபடி நஷ்ட ஈடு கேட்டு எந்த வழக்கும் நான் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் லக்க சொத்தில் நான் ஆக்கிரமித்து வைத்திருந்ததை அரசு அதிகாரிகள்தான் அப்புறப்படுத்தினார் என்றும், தனி நபர்கள் யாரும் அப்புறப்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

6. எனது நிருபணவாக்குமூலத்தில் 2ம் லக்க சொத்தின் சர்வே எண்.174/7 அதன் விஸ்தீரணம் 23 செண்ட் என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2ம் லக்க சொத்தை நான் அனுபவம் செயததை காட்டுவதற்கு வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 2ம் லக்க சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்து வரவில்லை என்றும் வழக்கிற்காக 1ம் லக்க சொத்துடன் சேர்த்து அனுபவம் செய்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் லக்க சொத்தில் எந்த மரங்களும் நான் வைத்திருக்கவில்லை என்றும், அவற்றை 3ம் பிரதிவாதியும், அவரது ஆட்களும் ஜேசிபி மூலம் அகற்றிவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. எந்த தேதியில் அவ்வாறு 3ம் பிரதிவாதி மற்றவர்களும் மரங்களை அப்புறப்படுத்தினார்கள் என்று எனது நிருபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். தாவா 2ம் லக்க சொத்தில் நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றாலும், எனவே மேற்படி சொத்தில் எனக்கு நீடனுபோக பாத்தியம் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 2ம் லக்க சொத்தை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கத்தகதல்ல என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை.)**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.